பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

139
3-82

இப்புத்தகத்தில்

சலவாத்துப்பாட்டு.

கப்பற்பாட்டு - ஊஞ்சற்பாட்டு.

கும்மிப்பாட்டு - தாலாட்டு,

கோழிப்பெண்பாட்டு.

இவைகள் அடங்கியிருக்கின்றன.

இதனை

நயினாமுகம்மதுப்புலவரவர்களால்

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்கப்

பரிசோதித்து

தி-இரத்தினமுதலியார்

அவர்களது

கலைக்கியாணமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கபட்டது

1882—ஸு

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது — காயற்பட்டணம்

உதுமானயினூர் லப்பைப்புலவ ரவர்கள்பாடிய

சலவாத்துப்பாட்டு.

கொச்சகக்கலிப்பா.

இன்னல்லாகவென்றே குறுஆனிலே வகஹுயத்திறக்கிய தன்பயன்
சொன்னன்யாஹுமலக்குகளியாருமென் றாதர்மீதிற்சொலுஞ்சலவாத்தை
யே, பன்னியாருமியம்புகளொன்றிற்குப் பத்துயானுரைப்பேனென்ற
தாலது, தன்னையோதின ஞளுமுகம்மதுசல்லல்லாகுஅலைகிவசல்லமே()

மன்னர்மூசாநபிக்கொருமானிடன் மாறுசெய்தவன்மாண்டடக்காதி
ருக், தென்னவேயிறை யென்னடியானிடத் தேகிகீர்கமனிட்டடக்கும்மவ,
னுன்னியேயபிபேர் தவுறுத்திற்கண் டோதினுன்சலவாத்தொனறதாலது
தன்னையோதின ஞளுமுகம்மது சல்லல்லாகுஅலைகிவசல்லமே (௨)

காதர்மூசாநபி தாம்பொமத்துகாளில்காவினிற்றுகம்வாராமலே, யோ
தவேயிறையே வழியெனக்கினுயாதப்புஜன் றுரையாயெனத், தூநாயி
றசூல் சலவாத்தைதீர்சொல்லுந் தாகமுறுமெதனைச்சொன்னதாற், றுதன்னையு
மோராளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே (௩)

உங்கள்தீன்வழியாயிருந்துங்கள்பேரோதக்கேட்டெனைசலவாத்தவ
ன், பொங்குயுனாயாதபகிலனைப்போல் பகிலனிலையெனத்தேவரீர், சகைக
ாவுகொண்டோதினதாலது தன்னையோதவுந் தந்துங்கபுரினிற், றங்குா
ளொனனை யாளுமுகம்மது சல்லல்லாகுஅலைகிவசல்லமே. (௪)

காட்டுமொனபி யேயுமைத்தான்பினை கானகத்தினில் வைத்தினியான்
வர, மாட்டேஞுகிலுமதுமபத்தாரனவர் வளாலேயுக்கள்மேப ரவர்காதினி
ற், கேட்டுமேசலவாத்துரையார்வழி கேட்டிலாவ்னென் றேதினதாலும்
மைச்; சாட்டினெனனை யாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல
மே. (௫)

மெய்க்குறானை விரித்திறைவேயவின வேதவாய்மை விலக்குகன்ஞஎ
னக, சிக்கிராப்பகலப்பெரும்பாவமே செய்தனியாலடியேனெனைசெய்
குவேன், மக்காராஜுமுகம்மதேநும் சலவாத்தையோதும்வரிலைசயிறுவென்
றன், சக்காரத்தினிலாளுமுகம்மது சல்லல்லாகுஅலைகிவசல்லமே (௬)

அஞ்சுகாணுங் கபுறிலடங்கியே சோதுகாணுக்கிபாமத்தமளியா, லஞ்சுகாணுமருசறிலே அதாபாணகாணுமடியாரனைவரும், கெஞ்சுகாணுமிறைவனைகாணொன்று கேட்குகாள்மூஸ்தகீமெனும்பாலத்திற், தஞ்சமென்னையாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே (எ)

தம்பிரான்சதுவானத்துச்சூரியன் றன்னையேசவளத் துயர்வாகவே, மூன்புகாட்டி அறுத்துமப்போகலே மூளைவெந்துமுயங்கி அங்கோவென, வெம்பியே அழுகாளைமருசறு வேளையாள்பவர் கீழ்ப்படிவேதிலைத், தம்பமாகவந்தாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே (அ)

வாருலாவு மடமயிலாகியா மங்கைமாதுமறியமேமனைக், கோருமாதியுமக்கருள்செய்மணக் கோலமாமருமூதினிலேயப்பொன், ஹூருலாவி வருந்திருக்காட்சியு முண்மையாகிநீதாகையுங்காணவே, தாகுமென்னையாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே (௯)

அல்லெல்லாகடங் தேகடந்தேழுவானம் பாத்துயர்வாகியப் பாலநூ, இல்லல்லாமுனமத்தகிய்யாத்தைதேயமிம்பவாதிதிருவுளமானதாற், செல் லெலாஞ்சலவாத்துஞ்சலாமுமே சொன்னதாலதையானு மியம்பினேன், சல்லல்லாகு அலாமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே (௰)

சலவாத்துப்பாட்டு - முற்றிற்று.

முன்னோர்கள்பாடிய

கப்பற்பாட்டு.

லாயிலாக இல்லல்லாகு - இல்லல்லா
முகம்மதுற்றசூலுல்லாகி சூலுல்லா

(க) முத்தகிளு லுகித்துவந்தோர் இல்லல்லா
மொழியகதாய்ப் படைக்கவந்தோர் இல்லல்லா
கத்தனருள்சிறக்கவந்தோர் இல்லல்லா
கனகவிளக் காகிவந்தோர் இல்லல்லா

புத்திமகிவறக்கனருள்பிரிவதாகிப், பொற்பகிகனத்தறுசுகற்புவியும் வாழ்க, எத்திசையுமெய்க்கவொருபொற்பிரபையாகி, ஏகாந்தமானரவிரதமயிலாகிச், சுத்தமுடனநான்குமூலக்கினறுமாகித், துய்யகவிமாவதனிஹுடபொருளுமாகிக், குற்றமணுகாதகவி கப்பல்கவிபாடக், கோமானேயெங்குநிறைசிமானிகாப்பு. (லாயி)

(உ) அலிபுநாம்வருவாழ் இல்லல்லா
அடுத்திடுதால் வக்க துவாய் இல்லல்லா
மெளிவில்லாவேறப்தக்மேமாம் இல்லல்லா
மிகுதகிமிம்தேய் லொக்சதுவாய் இல்லல்லா

மகிவானதாலினாற் காம்பறுவைத்து, வளர்கின்றலாமதாற்கமர்பந்து கட்டிக், குலவுமலமீறினாற்கபாலங்களிட்டுக், கோமான்றன்கோயினாற் சிவ கஞ்சமைத்து, வசியாதகாவென்ற அணியம்பரப்பி, வல்லவன்றாவென்ற சுக்கானையேற்றிப், பெலமாகஇவ்வெழுத் தால்வங்கம்வைத்தார், பேசுங்கண்மூன்றதா லெவருமேகாண. (லாயிலாக)

(௩) நால்சிபத்துத்காளமணி — இல்லல்லா
நல்லபச்சை மலக்கூத்து — இல்லல்லா
வாசஜப றாத்துதன்னில் — இல்லல்லா
வருஞ்சிவப்புப் பவளமது — இல்லல்லா

ஆசையொருமலக் கூத்தாற்கறுப்பதாகி அழ்காணலாகூத்துத் தங்கமுடன்நல்ல ஓசையுட்டாமணாய் பூப்பலதூக்கி, உண்மையெனு ஞானகலை மேற்கட்டிப், பேசுமொருஅவ்வலெனு நற்கொடியுமேற்றிப், பிசகாமல்ஜர்ஜலெனு மேளங்கொணிக்கக் காசகலநால்பேர்கள் பூத்திகாவாதுக, கடமைதிற்கப்பலையிற்கினாயா (லாயிலாக)

(௪) பாய்மரந்தான் பேயதனுல் — இல்லல்லா
பெருந்தேயதான கிபுலாவாய் — இல்லல்லா
ஆயுக்கஷிபாலமரந்தான் — இல்லல்லா
அடித்ததொருகாலதனுல் — இல்லல்லா

தோயாமலிதுகள நன்றுகவேகட்டித், துய்பலாம்சன்னபின்னலாலாத்துமாக, நேயமுடன்காம்பறு நாலெழுத்தைனுமாக, ஸ்ரீதுரியதவ்க்கிரப் பாய்மரகதேயுடன், ஓபாததூண்டா விளக்கெழுத்தைனுமாய், உண்மைசேர்வெற்றிபா யொக்கததுலகை, நாயனருளீராறு பிரக்கிதிர்ந்து, நலமாக ...கேற்றினாயா (லாயிலாக)

(௫) ஆனகலிமாவேற்றி — இல்லல்லா
அளவுடன்கமானேற்றி — இல்லல்லா
சினத்துள்ளகப்பலிலே — இல்லல்லா
சிறந்தமகு பூவேற்றி — இல்லல்லா

தானமுடன்கிலாகுகள் தொண்ணூற்றியாறும், தகுமாக்கணக்கர்தாமிருபேருமாக, ஈனமில்லாச்சிறுக்கிருபேருமாக, இயல்பானகப்பலாகுதாகோக்கினேனும், மானமுடனம்மாலி ஜெருடேரினேடும், வளமானவகைமதி லேறியேனின்று ஆனதொரு ஆகூகி யென்னும், அழகான மநதிரப் பாய்விரித்தோடினார் (லாயிலாக)

(௬) காயல்நகர்க் கடல்கடந்து — இல்லல்லா
கன்யகுமரினிலதிற்போய் — இல்லல்லா

ஆயுமலையாளஞ்சென்று இல்லல்லா
அடுத்தபொன்னுக் கைகையைக்கடந்து இல்லல்லா

மாயாதகண்ணூர் தலைச்சேரிகண்டு, வக்காரமான ஐன்கண்ணூடிகை த்து ஓபாக அட்சாக கயிறபாயேற்றி, ஓக்காரயானபகர் தன்னிலேயேபிச் சாயாசவண்ணமா யோகிமப்போது, சத்துருக்கள்ளரையங்குளவர்கண்டு, நீபாருசொல்லென கா கி கூ வெனநேசமொழிகேட்டங்க ளேஜடிஞரை யா (லாயிலாக

(எ) கள்ளக்கப்பல் தன்னைவென்று இல்லல்லா
கனத்தகபர் தனைக்கடந்து இல்லல்லா
செள்ளிபஜிந் தாவிற்செனறு இல்லல்லா
சிறந்தலங்கர்விட்டிறங்கி இல்லல்லா

வள்ளல்மகு முஹம்மதி மக்காவிற்சென்று வண்மையுடனே கருபா வைவலம்வந்து, விளருமூன்ற ஆதமபிபாசங்கடந்து, மேவுமதினநகரமெ ய்ப்போடுசென்று, உள்ளமகுதாம்வெளியில்வாய்பொற்றினேறு, ஒப்பான காபகப சைனியிற்சென்று, மெள்ளவரு பள்ளிமகுமூனதக்கடந்து, மே லவனகலறத்தி லாஞர்களையா (லாயிலாக)

(அ) ஆனபொழுதேதகவன் இல்லல்லா
அரியசெய்னை தனைப்புகழ்ந்து இல்லல்லா
தின்புகழும் கயிறகுல் இல்லல்லா
செகமலப் பதம்புகழ்ந்து இல்லல்லா

தானனைவகனெலிமூகியித்தின்பாதங், தப்பாமலெப்போதும் கட்பாய் ப்புகழ்ந்து, கோஞை ஆதிகுதறதனைததெரிந்து, குத்தாசறா குதபியாஞர் கள் கலல, தினனைபேர்களினதை நன்ருய்த்தெளிந்து, ஜெயமுள்ள வோர் பொருளை யெனறன்றுகாடி, மானமொடுமுற்றிடிற பேறதிசமுண்டாய், வ ல்லவஙகிருனைமிக வளருமேஜபா (லாயிலாக)

கப்பற்பாட்டு - முற்றுப்பெற்றது.

காஷிர் - முகம்மதுப்புலவர்பாடிய

ஊஞ்சற்பாட்டு.

தரு இராகம் - தோடி - ரூபகதாளம்

பல்லவி.

ஆடவாங்கள் ஊஞ்சல்ஆடவாங்கள்
அன்னமேபொன்னூஞ்சல் ஆடவாங்கள்

அநுபல்லவி

ஆடவாங்கள் கூறுல்கிங்க ளோடிவாங்கள்
ஆலஸியுல்லாமேற் பாடவாங்கள்... ... ...(ஆட)

சரணங்கள்

க. ஆதிபெரியோனருளாற் கால்கணாட்டி
யவனறுசொளிவாலே விட்டம்போட்டு
சிதமாகுருசொளிவால் வடங்கள்பூட்டி
ஜென்னத்திஜொளிவாலே பலகைபாவிக்
கீதமுடன்ஹூறுல்ஈன்கள் கவரிவீசக்
கிருபையுடன் வானவரா லாத்தியேந்த
ஆதமுதல்நபிமார்கள் வடந்தொட்டாட்ட
ஆலநபிமகுமூதா ராடுமூஞ்சல் (ஆட)

உ. பச்சைமரகதத்தினாற் கால்கணாட்டி
பவளவயிடூரியத்தால் விட்டம்போட்டு
நட்சத்திரங்கள்போலே வடங்கள்பூட்டி
நல்லமணிமுத்தத்தினாற் பலகைபாவிக்
கச்சணிந்தஹூறுல் ஈனைகள் கவரிவீசக்
ககனவர்கஸ்தூரியா லாத்தியேந்த
முச்சகம்புகழ் நபிமார் வடந்தொட்டாட்ட
முகம்மதுறசூல்நயினா ராடுமூஞ்சல் (ஆட)

ங. அதிகவொளிச் சூரியனாற் கால்கணாட்டி
யழகுசு சந்திரத்தால் விட்டம்போட்டு
மதியொளிவுசந்திரனால் வடங்கள்பூட்டி
மறையாதமின்னொளிவாற் பலகைபாவிப்
பதியொளிவுஹூறுல்ஈன்கள் கவரிவீசப்
பச்சைக்கற்பூர ஆலாத்தியேந்த
கதிஜா ஆயிசாயிருவர் வடந்தொட்டாட்ட
காத்திமுல்நபியிருந் தாடுமூஞ்சல் (ஆட)

ச. வயிரம்வயிடூரியத்தாற் கால்கணாட்டி
மாணிக்கத்தாலதின்மேல் விட்டம்போட்டு
உயரொளிவுநீலமணி வடங்கள்பூட்டி
யோகைபெறுஞ் சுவனமணிப் பலகைபாவி
நயமுடையஹூறுலீன்கள் கவரிவீச
நகைகமழுங்குங்குமத்தா லாலாத்தியேந்த
வையமுழுமாரியத்தும் வடந்தொட்டாட்ட
முகம்மதுறசூல்நயினா ராடுமூஞ்சல் (ஆட)

ரு. சிறந்தநல்முர்த்தகாவாற் கால்க்ணாட்டி
ஜென்னத்துபிருதவுசால் விட்டம்போட்டு
குதவத்தினுமேலசில வடங்கள்பூட்டிக்
குலவுமெல்லகுமகுபூலுப் பலகைபாவி

ஊஞ்சற்பாட்டு

மதுராவாய்க்கூறுல்கின்கள் கவரிவீச
வானவர்கள்பன்னீரா லாத்தியேந்த
விதுவதின அபஷாவும் வடங்தொட்டாட்ட
வேதாம்பராலகபி யாடுமூஞ்சல் (ஆட)

௬. லாகூத்தினுலேபொளிக் கால்கனாட்டி
கயமுள்ளமலக்கூத்தால் விட்டம்போட்டுத்
திர்க்கமுள்ள ஜெபுறாத்தால் வடங்கள்பூட்டி
ஜெயவொளிகலறத்தாற் பலகைபாவி
வாக்கில்சலவாத்துடனே சவுகாஉம்மா
வரிசையுள்ளறகுமாவும் வடங்தொட்டாட்டத்
திர்க்கமுள்ள ஆலகபி யாடுமூஞ்சல
தீன்தீன்முகம்மதனு ராடுமூஞ்சல் (ஆட)

௭. சந்தனத்தினுவிலங்கக் கால்கனாட்டித்
தயங்கவொளியகிலதனல் விட்டம்போட்டு
விச்சைதயுள்ளகுங்குமத்தால் வடங்கள்பூட்டி
விளங்குகின்றகஸ்தூரிப் பலகைபாவிக்
கொத்துலவுகூறுல்கின்கள் கவரிவீசக்
கூர்மையுள்ள உம்முசல்மா வடங்தொட்டாட்டச்
சுக்கரஞ்சேராலகபி யாடுமூஞ்சல்
சோதிநபிமுகம்மதனு ராடுமூஞ்சல் (ஆட)

௮. பொன்னொளியினுலேசில கால்கனாட்டி
புகழொளியினுலதின்மேல் விட்டம்போட்டு
மின்னொளிபோலமுத்து வடங்கள்பூட்டி
மேன்மையுள்ள மரகதத்தாற் பலகைபாவிக்
கன்னியர்கள் கூறுல்கின்கள் கவரிவீசக்
கதியுறும் உம்முல்மாக்கீன் வடங்தொட்டாட்ட
மன்னர்புகழ்நபியிறசூ லாடுமூஞ்சல்
மக்கர்முகம்மதனு ராடுமூஞ்சல் (ஆட)

௯. ஆணிப்பொன்னதனுலே கால்கனாட்டி
யழகுமணிரத்தினத்தால் விட்டம்போட்டு
மாணிக்கமிழைத்தமணி வடங்கள்பூட்டி
வானிலங்குமதியமெனப் பலகைபாவி
சேனாட்டுகூறுல்கின்கள் கவரிவீச
செயினபுநாச்சியார் வடங்தொட்டாட்டப்
பூனாமார்பிறசூ லாடுமூஞ்சற்
புகழ்பெற்றநபியிறசூ லாடுமூஞ்சல் (ஆட)

௰. சித்திரத்தினுலேசில கால்கனாட்டித்
தெள்ளமுகவின்பத்தால் விட்டம்போட்டு

114903

வெற்றியுடனேம்பொன்னால் வடக்கள்பூட்டி
மேவும்வயிடூரியத்தாற் பலகைபாவி
மத்திதனில்கூறுல்கீன்கள் கவரிவீச
மரியம்ஆசியாஇருவர் வடந்தொட்டாட்ட
முத்திரைசேராலவி யாடுமூஞ்சல்
முஸ்தபாமுகம்மதனா ராடுமூஞ்சல் (ஆட)

௰௧ திக்கெருளிவாலேசில கால்கணாட்டித்
திர்க்கமுள்ளதசபிகால் விட்டம்போட்டுத்
தக்குபீர்தனெனாளிவால் வடக்கள்பூட்டித்
தகையுடனே தகுலீலாற் பலகைபாவிப்
பக்கவிலேகூறுல்கீன்கள் கவரிவீசப்
பண்பபூபக்கருமர் வடந்தொட்டாட்ட
மக்கநகர்வாழரச ராடுமூஞ்சல்
முகம்மதற்றசூல்நயினா ராடுமூஞ்சல் (ஆட)

௰௨ ஆல்கம்துஎன்றதொரு கால்கணாட்டி
விஸ்லாகியென்றதன்மேல் விட்டம்போட்டு
நல்லதொருநாப்பிலென்ற வடங்கள்பூட்டி
நல்லதொருஆலமீன் பலகைபாவி
கல்புமகிழ்கூறுல்கீன்கள் கவரிவீசக்
கதியுதுமானாலியும் வடந்தொட்டாட்டச்
செல்வமுறும்ஆலவபி யாடுமூஞ்சல்
செய்யிதுமுகம்மதனா ராடுமூஞ்சல் (ஆட)

௰௩ சுல்த்தானியென்றதொரு கால்கணாட்டிச்
சுத்தமுள்ளமலக்கானில் விட்டம்போட்டுக்
குல்த்தானியென்றதின்மேல் வடக்கள்பூட்டிக்
குலவும்ஒளிபுறுக்கானிப் பலகைபாவி
வலமிடமும்கூறுல்கீன்கள் கவரிவீச
வள்ளலசனுசைனும் வடந்தொட்டாட்டக்
குலத்திலுயர்குறைசினபி யாடுமூஞ்சல்
கோஜா முகம்மதனா ராடுமூஞ்சல் (ஆட)

௰௪ வல்லவன்றன்றகுமத்தாற் கால்கணாட்டி
வரிசையுள்ளகிருமத்தால் விட்டம்போட்டு
நல்லதொருஆயியததால் வடக்கள்பூட்டி
நலமானகிருஸபினாற் பலகைபாவி
வல்லியர்கள்கூறுல்கீன்கள் கவரிவீச
வான்சிபுரில்மீக்காயில் வடந்தொட்டாட்டத்

செல்லுலவுகவிகைகவி யாடுமூஞ்சல்
தீன்தீன்முகம்மதனு ராடுமூஞ்சல் (ஆட)

௰௫ வாசமுள்ளபூமரத்தாற் கால்கனாட்டி
வடிவுள்ளவச்சிரமணி விட்டம்போட்டு
நேசமுடனொளிவுடைய வடங்கள்பூட்டி
நேர்மையுள்ளபொன்னைதனாற் பலகைபாவி
ஆசையுடன்கூறுங்கிளைகள் கவரிவீச
இசுருயில்இசுருபீல வடந்தொட்டாட்டத்
தேசம்புகழ்நபியிறசூ லாடுமூஞ்சல்
தீனதீன்முகம்மதனு ராடுமூஞ்சல் (ஆட)

௰௬ காபகபுசைனியாற் கால்கனாட்டிக்
கல்பென்றசூழ்ச்சமதால் விட்டம்போட்டுச்
சாபசந்திரசூரியகலை வடங்கள்பூட்டிச்
சகைமக்காமன்யகுழூதுப் பலகைபாவித்
தாபரங்கொண்ணூற்றறுவர் வடந்தொட்டாட்டச்
சங்கையுடனேவானகே கவரிவீசச்
சாபல்யமுகம்மதனு ராடுமூஞ்சல்
ஓரகல்துன்பியா இருந்தே ஆடுமூஞ்சல் (ஆட)

௰௭ ஆலமஜ்ஜிசாமதனாற் கால்கனாட்டி
ஆலமிநாஸாதனால் விட்டம்போட்டு
ஆலமறுவாகதனால் வடங்கள்பூட்டி
ஆலமின்சானதனாற் பலகைபாவிச்
சாலவுமேமூகியித்தீன் வடந்தொட்டாட்டச்
சங்கையுள்ளசமீதென்னும் சாகிபீனை
சீலமுறும்சிருசித்தின் மனத்திலுற்ற
செயமிதுமுகம்மதனு ராடுமூஞ்சல் (ஆட)

ஊஞ்சற்பாட்டு - முற்றிற்று.

இஃது

புதுச்சேரி-ஒ-கா திருமூகியித்தினென்பவர்பாடிய

கும்மிப்பாட்டு.

கும்மியடிபெண்ணே கும்மியடி-குபி-ரொகெங்கியோடவே கும்மியடி
நம்மையாளுமிறையவனே நிதமும்-நாடிக்கும்மியடியுங்கடி-இனக்-கேதிழக்கு
ம்மியடியுங்கடி.. (௧)

தானேதானுயிருப்பவனும்-என்றுந்-தன்னந்தனிமை யுடையவனும் வானமும்பூமியும்போற்றுமிறைவனை வணங்கிக்கும்மியடியுங்கடி-மன-மிணங்கிக்கும்மியடியுங்கடி.. (உ)

ஆலம்பனையுங்காரணமாய்-நின்ற-அண்ணல்முகம்மது நந்நபிமேற், சாலவுமாசலவாத்தினையோதிச் சந்திக்கக்கும்மியடியுங்கடி-மனந்-தொந்திக்கக்கும்மியடியுங்கடி.. (௩)

ஆதியினிலொளிவாயிருந்தே-பின்னர்-அப்துல்லாவெற்றியில் வந்துதித்தே-ராகாமினுர்பெற்றவள்ளலைப்போற்றி மகிழ்ந்துகும்மி யடியுங்கடி-மிகப்-புகழ்ந்துகும்மியடியுங்கடி.. (௪)

எல்லாவஸ்தும்படைத்தவனு-மென்றும்-ஈரேழுலகையுங் காப்பவனும்-அல்லாவென்னும்பேர்கொண்டவன்றூதனை யடுக்கக்கும்மி யடியுங்கடி-பவம்-விடுக்கக்கும்மியடியுங்கடி.. (௫)

வானுலகெங்கும்புகழ்ந்தேற்ற-மக்க-மாநகர்தன்னிலவதரித்த-தேனவிழ்மாலைமுகம்மது றசூலைத் தெரிந்துகும்மியடியுங்கடி-மனம்-புரிந்துகும்மியடியுங்கடி.. (௬)

ஆரம்பகேளாடாசியாமறிய-மிவ்-வவனியின்மருத்துவம்புகுக்-கருணையுலகப்பிறந்தமுகம்மதைக் கருதிக்கும்மியடியுங்கடி-குழல்-சொருகிக்கும்மியடியுங்கடி.. (௭)

ஞானமுந்தானமுநல்லறிவு-மிக்க-நாணமுமானமு முள்ளவராம்-வானவர்போற்றுமுகம்மது றசூலை வாழ்த்திக்கும்மியடி யுங்கடி-கரந்-தாழ்த்திக்கும்மியடியுங்கடி.. (௮)

சுற்றிலுங்காதவழியிலரசுறுஞ்-சுடிகைமன்னர்களிறைஞ்சுற-மூற்றுங்கிங்கவிப்பட்டம்பெற்றோனை-மூடுகைக்கும்மியடியுங்கடி-மிகக்-கடுகைக்கும்மி யடியுங்கடி.. (௯)

மனுவின்புகல்வரிருவருஞ்செத்து-மரித்திடுஞ்செய்தி யறிந்தவுடன்-அலுச்செய்தெழுப்பியதூதனைப் போற்றித்துதித்துக்கும்மி யடியுங்கடி-மிக-மதித்துக்கும்மியடியுங்கடி.. (௰)

வஞ்சனைதகொழில்கள்வானுலகிற்சொல்ல-மாட்டாதென்றெண்ணி யேவாக்களித்தேதார்-நெஞ்சம்புகழுந்தலைவனைப்பிளந்தேதானை நினைந்து கும்மியடியுங்கடி-துகில்-புனைந்துகும்மியடியுங்கடி.. (௰௧)

ஓதுந்தியாமத்திலமானிடர்கள்மிக-வாடுகெடியலையும் போதினில்நல்லாதாரஞ்சொல்மென்றுடும்பைபுக முதிந்துகும்மியடியுங்கடி-மலர்-சொரிந்துகும்மியடியுங்கடி.. (௰௨)

ஆசிக்குலத்திலுதித்தவராம்-பனீ-ஆதம்மரபினிலுள்ளவராம்- வாசனைவீசுமெய்த்தூதரின்தீன்மிக வலுக்கக்கும்மியடியுங்கடி-திகழ்-சொலிக்கக்கும்மியடியுங்கடி.. (௧௩)

சல்மான்பாரிசக்காண்டினிலிருந்து தளிர்த்துக்கனிதாகட்டளித்த-செல்லார்கவிகைமாநபிவர்தீனமிகச்-செழிக்கக்கும்மியடியுங்கடி-பவம்- ஒழிக்கக்கும்மியடியுங்கடி ... ... (௧௪)

திமிசுக்கிறைபவனின்றதகைசமினைச்சீர்பெறப்பெண்ணுருவாக்கிவைத்த-அமரர்புகழும்அருமறைச்செப்பாற்றி-அன்பாய்க்கும்மி யடியுங்கடி-மிகு-தென்பாய்க்கும்மியடியுங்கடி. ... ... (௧௫)

காட்டினில்வாழும்பிணைக்குப்பிணைநின்று காரணமணைந்தக் காட்டிமறை-யேட்டிலடங்காவிறையவன்றூதரை யிசைத்துகும்மியடியுங்கடி - மெள்ள-அசைந்துகும்மியடியுங்கடி ... ... (௧௬)

பொல்லாச்சூத்னியுமேசுந்-தினம்-புலம்பித்திரியப்பூதலத்தின் - மல்லாடிக்காபினாவென்றமுகம்மதை வாழ்த்திக்கும்மியடியுங்கடி-கரங்-தாழ்த்திக்கும்மியடியுங்கடி. ... ... (௧௭)

வாடைகள்கஸ்தூரிவழிகாட்ட-வந்த-வள்ளல்முகம்மதர்வாக்கியத்தின்-சாடைக்குளம்பொருந்தாதவர்தலைநீளச்-சாடிக்கும்மியடியுங்கடி-தமிழ் பாடிக்கும்மியடியுங்கடி. ... ... (௧௮)

வானுலகிற்சென்றிறையுடனே-மிக்க-வார்த்தைகளாடிய வள்ளல்தந்த-தீனையிகழ்ந்துடக்கின்றதீமையார் தெளியக்கும்மியடியுங்கடி - இடை நெளியக்கும்மியடியுங்கடி ... ...(௧௯)

வாக்குமனமும்பொருந்தச்சொல்லுங்-கவி-மாவின்பொருளை மனதில்வையா-மாக்களையேகன்வதைப்பதெனவென்றெண்ணியே வருந்திக்கும்மியடியுங்கடி-புண-வருந்திக்கும்மியடியுங்கடி ... ... (௨௰)

காளொன்றுக்கைந்துவிசைவணக்கா-ரத்த-காளில்நரகத்தனிலிருந்தே தோளொன்றுகொட்டித்திகைப்பவொன்றேமனந்-தேம்பக்கும்மியடியுங்கடி-முகங்-கூம்பக்கும்மியடியுங்கடி ... ... (௨௧)

சறகின்தக்கடமின்றிநன்னோன்பைச்-சட்டைசெய்யாமலேவிட்டுவிட்டோர்-நரகினிற்பசித்தலைவரெனநேநகவின்றுகும்மியடியுங்கடி-மனம்-புகன்றுகும்மியடியுங்கடி ... ... (௨௨)

கள்ளுச்சாராயந்தனைக்குடித்துச்சண்டை-கஞ்சாவபினிமிகப்புசித்தே துள்ளிவிழுந்தலைந்தேதடக்கின்றவர் கருகக்கும்மியடியுங்கடி-எரி-உருகக்கும்மியடியுங்கடி ... ... (௨௩)

குருசந்திரர்கள் தன்னுடனே - இனத் - தொக்கட்டானுடுந்துடுக்கதில்லாம், வாதிற்பொருளழிந்தேய்ந்தபின் றீமினில் வாளக்குமயிடியுங்கடி-விழி-புாளக்கும்மியடியுங்கடி.......................................(௨௪)

கொண்டமனேவியைவிட்டொருவன் கண்ட - கோதைதனின் மீதினிற் காதலுற்ற, மின்னார்கள் தீயில்விழுந்தழிவாரென்றே மினவிக்கும்மியடியுங்கடி - முக - மினவிக்கும்மியடியுங்கடி.......................................(௨௫)

இந்தக்கும்மியை படித்தோர்க்கு-மிக - இலங்கஅச்சிற்பதித்தோர்க்கும் முருகுமிகுநயவண்ணக்குமரத்திண்டெண்டதேவாழ்த்திக்கும்மியடியுங்கடி - வாழ்க - வாழ்த்திக்கும்மியடியுங்கடி.......................................(௨௬)

கும்மிப்பாட்டு

முற்றுப்பெற்றது.

இஃது.

முன்னோர்கள் பாடிய

தாலாட்டு.

காப்பு-வெண்பா

பாருலகில்வண்ணப்பரிமளஞ்சேர்கும்மிக்குள்
சீருலகிற்றாலாட்டைச்செப்புதற்கு—சேருடனே
பார்த்தாலுமென்சொற் பழுதுவாராதபடி
காத்தருள்வா யாதிகீகாப்பு

கண்ணிகள்.

சீர்கொண்ட ஆலமெல்லாஞ்சிறக்க இசலங்கதழைக்க
நேர்கொண்ட திண்ணை நெறிகொண்டுவந்தவரோ (௧)

முன்னேயொளிவாகி முதலோன்றித்தாதாய்ப்
பின்னேகபியாய்ப் பிறந்தமுகம்மதுவே (௨)

அண்ணலட்டதில்லாதரும் அருணமமகவாகப்
பெண்ணினழகாமினுர் பெற்றெடுத்தபாலகரோ (௩)

அலிமாமுலையருந்தி யவாகத்திலேவளர்ந்து
புலிமானெனுருதுவறைகீர் உண்ணவந்தபுண்ணியரோ (௪)

திக்குத்திகாந்தமொடுக் தேயத்தனக்குயர்ந்த
மக்கம்பிறந்து மதினமஆளவந்தவரோ (௫)

மட்டிலவுஞ்சொர்க்க வாழ்மடவார்கலாட்டித்
தொட்டிலிற்றுயில்கொள்ளுந் தூயமுகம்மதுவே (௬)

தாலாட்டு

மாணிக்கத்தொட்டிலதை மடவார்பிடித்தாடப்
பூணிக்கையாய்க்கண்வளரும் புண்ணியராய்வந்தவரோ (௭)

பார்க்கக்கண்கூசியும் பாலைக்கதிஞ்சாத்தில்
ஆர்க்குமன்னிரவிக்கும் அண்ணல்முகம்மதரோ (௮)

பாரமலைபோல்நாகம் பதியிற்படம்விரித்தே
நேரில்லாதிருக்கக்கண்டுநீள் அரும்பாலவதைத்தோரோ (௯)

கானகத்திலாறுதனைக் கடுகவரழைத்தே
யீனமில்லாநீரளிக்கு மெங்கண்முகம்மதுவே (௰)

புதியகிணறுப்புநீர் பொங்கிநம்பதக்கழுவ
நதியதழைத்திக்காட்டவந்த நன்மைமுகம்மதுவே (௰௧)

எங்கணையினறோ வெல்லவர்க்குத்தாயகமே
அங்கங்கஸ்தூரிவீசு மழகார்முகம்மதுவே (௰௨)

ஆதிபடைத்த அப்துகளடங்கலுக்கும்
நீதிமணிப்பேரொளிவாய் நின்றமுகம்மதுவே (௰௩)

முத்திலுதித்தவரோ முமினாய்வந்தவரோ
நித்தனருள்வேதப்படி நெறிநடத்துங்கோமானே (௰௪)

மஞ்சுகுடைநிழற்ற மக்காவின்வீதியெல்லாங்
கொஞ்சிவிளையாடுமெங்கள் கோமான்முகம்மதுவே (௰௫)

விண்ணினுநேசத்து வேதமுகம்மதுவே
கண்ணின்மணியேயெங்கள்காரணரோகண்வளரீர் (௰௬)

தேசப்பொருளே தெவிட்டாச்செழும்பாகே
வாசத்திருமேனி வள்ளன்முகம்மதுவே (௰௭)

உற்றஅபூபக்கரும் உண்மையுமர்தமக்கும்
மற்றுநிகரில்லாத மருகனெனவந்தவரோ (௰௮)

செய்யுதுமானார்க்குஞ் சிறந்தபுலிஅலிக்கும்
வையமபுகழ்மாதுலராய வந்தமுகம்மதுவே (௰௯)

சீராரிமாம் அசனார் சிறந்தஇமாமுசைனார்
பேரார்நும்பேரெனப்பேறுகொள்ளவந்தவரோ (௨௰)

நண்ணுசகாபிமார்கள் நாற்பத்திராயிரர்க்கும்
கண்மணியொளிபோலக் கலந்திருந்தகாரணரோ (௨௧)

திக்குகளில்திவிசுலாஞ் சேர்ந்தவும்மத்தோர்களையே
தற்காத்தேயாளும்ஷபாஅத்துக்குடையவரோ (௨௨)

தாலாட்டு.

பங்கயப்பொற்றாள் பீவி பாத்திமாநாச்சியெனும்
மங்கையர்க்குந்தந்தையென வந்தமுகம்மதுவே (௨௩)

அண்டர்புகழ்கதிஜா அங்கணவரென்றுலகோர்
கொண்டுபுகழவந்த கோமான்முகம்மதுவே (௨௪)

எண்டிசையும்பாரு மேகாப்பெரும்பதியும்
அண்டருலகெல்லாம் அரசாளவந்தவரே (௨௫)

கூடேறுந்தியதனுட் சுழன்றெரியும்பாவிகளை
ஈடேற்றிக்காக்கவந்த வெங்கண்முகம்மதுவே (௨௬)

மீனோடும்பேசி மிடியருக்குவாழ்வுநல்கி
மானோடும்பேசுமெங்கள் வள்ளன்முகம்மதுவே (௨௭)

வேம்பானகாயிரும்மை வெட்டவரும்வழியிற்
பாம்படையும்பொதும்பிற் பள்ளிகொள்ளவந்தவரே (௨௮)

நல்லநெறியீமானு நானிலத்திலேதழைக்கக்
கல்லுகரம்பிடித்துவிடக் காட்டிவந்தகாரணரே (௨௯)

தீமைதனைப்பேசுகின்ற செயலைக்கருவறுத்தே
உண்மைதனைப்பேசவைக்கு முண்மைமுகம்மதுவே (௩௰)

அறபுத்திருநாட்டில் அடங்கலுமீமான்றழைக்க
குறைசிப்பெருமைக்குலத்திற் கோமானாய்வந்தவரோ (௩௧)

சொல்லாலுயர்ந்ததிருச் சொர்க்கபதிக்கரசாய்
அல்லாவருட்படி தீனை யாரம்பிக்கும்வல்லவரே (௩௨)

ஈமான்றழைக்க இசுலாம்பெருத்தோங்க
மாமானங்காக்கவந்த மன்னர்முகம்மதுவே (௩௩)

நாயுமுடும்புமுசல் நவிலுநாற்கால்மிருகம்
பேயுருந்தமொடேதிராய்ப் பேசவைக்குங்காரணரே (௩௪)

கல்லைவணங்குங் காபிர்களையேயறுத்து
நல்லநெறியீமானை ஈடேற்றவந்தவரே (௩௫)

விரிந்தகுயிர்க்காட்டை வெட்டிவழியாக்கிப்
பரிந்தபுகழீமானைப் பயிரேற்றவந்தவரே (௩௬)

செய்தவமெல்லாம்போற்றத் தீன்பயிரைத்தானேற்றிக்
கைவிரலனீரழைக்குங் கபீபுமுகம்மதுவே (௩௭)

கொந்தாலமேப்பாசே கோஜலமாரணவமோ
சாந்தாபமில்லாத சாதிக்குலநாயகமே (௫௮)

குங்குமப்பூமாலையணி கொற்றவர்களுக்கரசே
அங்கதனெதிரொளிவீசு மண்ணல்முகம்மதுவே (௫௯)

ஆராருக்காணவொண்ணு தந்தரத்தின்மேலேபோய்ப்
போரார்பெரியவன்முன் பேசவேவந்தவரே (௬௰)

வேதமோகாவில் விளைவாகு வித்தகரே
பாதமவனிதீண்டாப் பயகாம்பர்கண்வளரீர் (௬௧)

பிடரிலணிபாகப் பிறைபோலிலாஞ்சனையும்
படையேறிவெனனும் பார்த்திபரேகண்வளரீர் (௬௨)

ஏகன்சமுகமதிலெக்கியெனுமரத்தில்
தோகைமயில்வடிவாய்த் தோன்றிவந்தன்னமயிலே (௬௩)

முன்காணுந்தூரமட்டு முழுதுமதுபோலப்
பின்காணுமவள்ளாலே பெருமையாய்க்கண்வளரீர் (௬௪)

வள்ளல்முகம்மதுமேல் வாழ்த்துகின்றதாலாட்டைப்
பிள்ளையின் பிரியம்போற் படிப்போர்களும்வாழி (௬௫)

மூமின்முகம்மதுசம் முத்தின்மொழிதாலாட்டைப்
பூமிதிலெந்நாளும் போற்றுவோர்வாழியவே (௬௬)

பூமியின்மும்மாரிமழை பொழிந்தெவர்களும்வாழி
ஆமீனல்லா ஆமீன் யாறப்பில்ஆலமீனே (௬௭)

தாலாட்டு

முற்றுப்பெற்றது

உ

விருத்தம்

அண்டர்கோன் புகழண்ணல்முகம்மதின் ஆரணத்தையறிந்துளகத்
தினிற். கொண்டோருக்குலவிடங்கிடாக் கொடியர்பாழ்ரகுக்கிரையாவ
ரேற், பண்டெனனபிமார்களுவப்புறும் பாக்கியமாக்கப்படியமல்செய்தவ
ர். கண்டிமென்மொழிக்கன்னியர் வாழ்ந்திடுக் கனகாட்டைக் கையாளுவர்
காணுமே

பிசுமில்லாஇற்றகுமானிற்றகீம்.

இ ஃ து

முன்னோர்கள்பாடிய

தோழிப்பெண்பாட்டு.

காப்பு - வெண்பா.

தோழிப்பெண்பாட்டைத் தொகுப்பாயுரைப்பதற்கு
ஆழிசூழெவ்வுலகு மமைத்தோனே-வாழ்வுறும்
அல்லாவேயென்றனக் கன்பருளேயேநிதமும்
வல்லானேயீந்தருளுவாய்.

கண்ணிகள்.

அரியவனேபெரியவனே ஆயிரம்பேருடையவனே
உரியவனேயுடையவனே யுலகமெல்லாம்படைத்தவனே (௧)

உலகமெல்லாம்படைத்தவனே யுண்மையுள்ளமெய்ப்பொருளே
பலமலையும்அலைகடலும் படைத்தழிக்குங்காரணனே (௨)

காரணனேபூரணனே கிருத்தறியுங்கோமானே
பூரணனேகிரலைசூழ் பூலோகமுடையவனே (௩)

பூவுலகம்வானுலகம் போற்றிசெய்யும்புண்ணியனே
மூவுலகங்கொண்டாட முக்கியமாய்ப்பாடுகிறேன் (௪)

தோழிப்பாட்டுப்பாடுகிறேன் சோதியுள்ளமன்னவனே
வாழியருள்தந்தேநீ வண்மையாய்க்காத்தருள்வாய் (௫)

காத்தருள்வாய்காத்தருள்வாய் கத்தாவேகாத்தருள்வாய்
பார்த்தருள்வாய்கிருபையினாற் படைத்தவனேயுன்னருளால் (௬)

மதித்தபெரும்புதுமையைக்கேள் மக்கமெனுமோர்பதியாம்
கதித்தபுகழ்அவ்வூரில் கருபத்துல்லாப்பள்ளிபெண்ணே (௭)

காபத்துல்லாபள்ளியினுட் காரணங்களும்மிகுதி
ஆபத்தெல்லாம்நீக்கிவிடு மன்னமேதோழிப்பெண்ணே (௮)

நன்னிலமாம்பொன்னிலத்தில் நபிவாழூல்விடமாம்
பொன்னிலமுமொவ்வாதாம் பூமிக்கெல்லாம்பொருத்தலமாம். (௯)

பூமிக்கெல்லாம்பொருத்தலமாம் போதுசிலாவிலங்குமாம்
ஈசமுள்ளவரிசைபல சேர்ந்ததலந்தோழிப்பெண்ணே (௰)

பதிபடிக்க டுப்பவர் பாவமெல்லாந்தீர்ந்திடுமே
கதியழைத்த நபியிறசூல் நாடுந்தலந்தோழிப்பெண்ணே (௧௧)

நம்மதிசேர்மக்கமதில் நபியிறசூல்பிறந்ததலம்
பொன்மதில்சூழ்கோட்டையுடன பூககமுகச்சோலைகளும் (௧௨)

பூங்காவனங்களினுள் பூமணங்கள்வீசிடுமாம்
ஆங்கானவூரில் அறபாத்துமலைதோழிப்பெண்ணே (௧௨)

அறபாத்துமலையிடத்தில் அச்சுசெய்பதன்மையுண்டாம்
இறைவேற்றுக்கருமமெல்லாம் நேராதுந்தோழிப்பெண்ணே (௧௪)

மோகவானோர்கள் ஆக்கம்வந்திறங்குந்தலம்
பாரோர்புகழுகின்ற பள்ளியுண்டுந்தோழிப்பெண்ணே (௧௫)

பள்ளிக்கெதிராகப் பத்துக்கொடிபறக்கும்
வெள்ளிபோல்மனாறு விளங்கிடுமேதோழிப்பெண்ணே (௧௬)

மெத்தப்பயத்துடனே மேலோன்வணக்கஞ்செய்வார்
குதுபாஅன்றுஞாறு ஆள்முழக்குந்தோழிப்பெண்ணே (௧௭)

அந்தப்பள்ளியிலுறுதிபூசாகவந்தங்கள்
புந்தியுறப்பெரியோனைப் புகழுவார்தோழிப்பெண்ணே (௧௮)

அவரவர்கள்வந்தல் கலக்கமாயிருந்தே
திகழுகின்ற பள்ளியினுள் தீன்கலிமாமுழக்கிடுவார் (௧௯)

தீனிறசூல்தானிருந்த திருமனையுமவ்விடமே
வானொளிவுமவ்வொளியில் மறைந்துவெளிதோன்றிடுமே (௨௰)

தோன்றும்பெரியோகத்தைச் சூழ்ந்திருப்பார்வானவர்கள்
என்றுசொல்லும்பெருமைதனை எண்ணத்தொலையாதே (௨௧)

எண்ணத்தொலையாதே நீறசூல்தம்மெய்யொளிவு
கண்ணனுக்கடங்காதே கல்புகுளிர்ந்திடுமே (௨௨)

கல்புகுளிர்ந்தேசித்தமுன் கருமமெல்லாந்தீர்ந்திடுமே
செல்வம்பெருகிடுமே ஜென்னத்துமுண்டாகிடுமே (௨௩)

பண்ணைவைத்தபீவி பாததியாநாயகத்தின்
தன்னைவைக்கதபாவாவின் சபாஅநதமுமுண்டாமே (௨௪)

சிறாசனுசைனர் செல்வரிருவருந்தான்
வீறுர்முடிதரித்த வெற்றியுள்ளோர்தோழிபணே (௨௫)

ஓரடிக்காந்தோழிப்பெண்ணே ஓதுங்கலிமானை
ஈரடிக்காந்தோழிப்பெண்காள் எண்ணித்தொழுதிடுங்காள் (௨௬)

மூவடிக்காம்சக்காத்திங்கள் மூத்தானைகையாலே
நாவடிக்காந்திரகம் நம்மளாவில்நாடாதே (௨௭)

நாலடிக்காந்தோழிப்பெண்காள் நன்றிசெரும்நோன்புகளை
மாலடிக்கவேபிடிப்பீர் வாழ்வுவருந்தோழிப்பெண்காள் (௨௮)

அஞ்சடிக்காந்தோழிப்பெண்காள் அச்சுதனைச்செய்திடுவீர்
நஞ்சடைந்ததிரகம் நம்மளாவில்நாடாதே (௨௯)

ஆறடிக்காந்தோழிப்பெண்காள் அல்லாஒருவனென்றும்
மாறடிக்காதேபுகழ வாழ்வுவுறுந்தோழிப்பெண்காள் (௩௰)

ஏழடிக்காந்தோழிப்பெண்காள் ஏகன்மலக்குகளாம்
தாழடிக்காதார்களென்று தானறிவீர்தோழிப்பெண்காள் (௩௧)

எட்டடிக்காந்தோழிப்பெண்காள் இரங்கியநால்வேதமுடன்
மட்டுமொழிபாம்சுருபும் வல்லோனமொழிதோழிப்பெண்காள் (௩௨)

ஒன்பதுவாம்நம்பிறசூல் உள்ளநபிமார்களெல்லாம்
அன்பொடிறைதூதரென்றறிந்திடுவீர்தோழிப்பெண்காள் (௩௩)

பத்தடிக்காஇவறதுகான் பலவுயிரெல்லாமெழுப்பி
கத்தனன்மைதீமைகளைக் கேட்கிறநாந்தோழிப்பெண்காள் (௩௪)

ஆயபதினொன்றாகரியதும் ஆகுமேயவனிடத்தில்
காயமொருவன்றானே நன்மைக்குகயமல்லால் (௩௫)

ஓசறியதிமைதனக் குகயமில்லைதோழிப்பெண்காள்
நீதியுடனிந்தப்படி நீங்கள் அறிந்துகொள்வீர் (௩௬)

உண்மையுள ஆதமபீ யுவந்தபஜ்ர்த்தொழுகை
வண்மையுடனே தொழுக வருவீர்கள்தோழிப்பெண்காள் (௩௭)

வேதஇபுருகிம்நபி வேண்டும்லுகருத்தொழுகை
மாதர்களேயின்று தொழ வாருங்கள் தோழிப்பெண்காள் (௩௮)

வெற்றியூனூசுநபி விளங்கும் அசறுத்தொழுகை
பற்றியதையேதொழுக வாருங்கள்தோழிப்பெண்காள் (௩௯)

துலவராமூசாநபி தம்மகரிபுத்தொழுகை
நானமுடனேதொழுக வாருங்கள்தோழிப்பெண்காள் (௪௰)

ஈசாநபிதொழுதாரினிய இஷாத்தொழுகை
கூசாமலேதொழுகக் கூடிவாரும்தோழிப்பெண்காள் (௩௧)

இசாவதனில்நம்நபிறசூல் இறைஞ்சும்வித்றுத்தொழுகை
ஆசாரமாய்த்தொழுக அன்னவாருந்தோழிப்பெண்காள் (௩௨)

அன்னமேதோகையரோ அழகாரும்பெண்குயிலே
சொன்னமேபைங்கிளியே தொழுதிடுவோம்நன்றாக (௩௩)

அல்லாவின்தூதுவனை ஆலநபியானவனை
வல்லாண்மைகொண்ட முகம்மதுறசூல்நபியை (௩௪)

கிட்டாதநன்னபியைக் கீர்த்திபெறுங்கடலைக்
கட்டாணிமுத்தொளிவை கபீபிறசூலானவனை (௩௫)

சிந்தாமணியானத் தீன்விளங்கவந்தவனைத்
கொந்தாலமானவனை கோஜாலமானவனை (௩௬)

சந்தாபமில்லாத சாதிகுல்நாயகத்தை
மக்கவுதித்தவனை மூமீன்கள்கைப்பொருளை (௩௭)

முதலாயுதித்திருந்த முகம்மதுறசூல்நபியை
சித்தம்புகழ்ந்திடுவீர் நேசமுள்ளதோழிப்பெண்காள் (௩௮)

சுத்தமுள்ளநபிறசூல் சுந்தரமாய்ப்பெற்றெடுத்த
பத்தினிபாத்திமத்தின் பலன்ஷபாஅத்தும்பெறுவீர் (௪௰)

ஆமீன் ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

தோழிப்பெண்பாட்டு

முற்றுப்பெற்றது.

1264
114903